# TNPSC GROUP-IV EXAM (MODEL QUESTIONS AND ANSWER)



# டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 தேர்வு

மாதிரி வினா-விடை 16

தொகுப்பு: சாம் ராஜேஷ்வரன்

## புவியியல் - தொடர்ச்சி

31. கீழ்க்கண்டவற்றுள், ஆசியாவின் வளம் பொருந்திய கடல் பிரதேசம் எது?
a. மன்னார் வளைகுடா b. சுந்தரவனக் காடுகள்
c. பிச்சாவரம் d. சில்கா ஏரி
e. விடை தெரியவில்லை

32. மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரானது சையத்ரி எனவும் அறியப்படுகின்றது. இதன் பொருளானது
a. தனித்துவமான இடம் b. புனித மலை
c. கடலை நோக்கி d. வழிபாட்டுத் தலம்
e. விடை தெரியவில்லை

33. பட்டியல் I–ஐ பட்டியல் II உடன் பொருத்துக

| பட்டியல் I கணவாய் | பட்டியல் II மாநிலம் |
|---|---|
| A. ஜோஜி லா | 1. சிக்கிம் |
| B. ஜெலப் லா | 2. இமாச்சல பிரதேசம் |
| C. நமாபாஸ் | 3. ஜம்மு மற்றும் காஷ்மீர் |
| D. ஷிப்கிலா | 4. உத்தரகாண்ட் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 1 | 3 | 4 | 2 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 1 | 4 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

34. _________ ஆறானது இந்தியாவின் ‘சிவப்பு ஆறு’ என அழைக்கப்படுகிறது.
a. கங்கை b. கோசி
c. தாமோதர் d. பிரம்மபுத்ரா
e. விடை தெரியவில்லை

35. இந்தியாவின் மிக நீளமான உள்நாட்டு நீர்வழிப் பாதை
a. கர்நூல் – கடப்பா கால்வாய்
b. தாமோதர் கால்வாய்
c. சாடியா – தூப்பிரி கால்வாய்
d. ஹால்டியா – அலகாபாத் கால்வாய்
e. விடை தெரியவில்லை

36. பட்டியல் 1–ல் உள்ள நகரங்களுடன் பட்டியல் 2–ன் தொழிற்சாலைகளை பொருத்துக.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| A. கல்பாக்கம் | 1. செய்தித்தாள் |
| B. ஜோரியா | 2. எண்ணெய் சுத்தகரிப்பு |
| C. மதுரா | 3. நிலக்கரி சுரங்கம் |
| D. நேபாநகர் | 4. அணுமின் நிலையம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

37. பின்வருவனவற்றில் எந்த ஒன்று எரி நட்சத்திரங்கள் என அறியப்படுகின்றன?
a. வால் நட்சத்திரங்கள் b. விண்கற்கள்
c. துருவ நட்சத்திரம் d. நட்சத்திரங்கள்
e. விடை தெரியவில்லை

38. ‘டைட்டன்’ என்பது
a. சனியின் மிகப் பெரிய துணைக்கோள்
b. சனியின் மிகச் சிறிய துணைக்கோள்
c. செவ்வாயின் மிகப்பெரிய துணைக்கோள்
d. செவ்வாயின் மிகச்சிறிய துணைக்கோள
e. விடை தெரியவில்லை

39. காளான் பாறை எதன் செயல்பாட்டால் உருவாக்கப்படுகிறது?
a. ஆறு b. காற்று
c. பனியாறு d. நிலத்தடி நீர்
e. விடை தெரியவில்லை

40. தேசிய நீர் வள நிறுவனம் அமைந்துள்ள இடம் _____
a. ரூர்க்கீ b. தான்பாத்
c. லக்னோ d. நியூடெல்லி
e. விடை தெரியவில்லை

41. உலகின் இரண்டாவது உயர்ந்த சிகரம்
a. மவுண்ட் எவரெஸ்ட் b. மவுண்ட் காட்வின் ஆஸ்டின்
c. கஞ்சன் ஜங்கா d. நந்தாதேவி
e. விடை தெரியவில்லை

42. உலக வனவிலங்கு வாரம் கொண்டாடப்படுவது
a. செப்டம்பர் முதல் வாரம்
b. செப்டம்பர் கடைசி வாரம்
c. அக்டோபர் முதல் வாரம்
d. அக்டோபர் கடைசி வாரம்
e. விடை தெரியவில்லை

43. இந்தியாவில் வன உயிர் பாதுகாப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
a. 1962 b. 1972 c. 1982 d. 1992
e. விடை தெரியவில்லை

44. இடம்பெயரும் விவசாயமுறை, கேரளாவில் என்ன பெயரில் அழைக்கப்படுகின்றது?
a. ஜூம் b. போனம் c. பிவார் d. பென்டா
e. விடை தெரியவில்லை

45. சாலைகளின் அடர்த்தி (1000 சதுரமீட்டருக்கு) அதிகமாக காணப்படும் இந்திய மாநிலம்
a. கோவா b. கேரளா c. அஸ்ஸாம் d. தமிழ்நாடு
e. விடை தெரியவில்லை

46. கங்கை டெல்டாவின் அமைப்பு எந்த டெல்டாவின் உதாரணம்
a. பறவைக்கால் டெல்டா b. வட்ட வளைவு டெல்டா
c. பொங்கும் முக டெல்டா d. விசிறி வடிவ டெல்டா
e. விடை தெரியவில்லை

47. கீழ்வரும் நிறுவனங்கள் அது நிறுவப்பட்ட ஆண்டுடன் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு.

| | |
|---|---|
| A. சித்தரஞ்சன் ரெயில் பெட்டிதொழிற்சாலை | 1. 1986 |
| B. ரெயில் பெட்டி தொழிற்சாலை | 2. 1984 |
| C. ஒருங்கிணைந்த ரெயில் பெட்டி தொழிற்சாலை | 3. 1947 |
| D. ரெயில் சக்கரதொழிற்சாலை | 4. 1952 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

48. கீழ்க்கண்டவற்றை கால கிரம முறைப்படி வரிசைப் படுத்தவும்
I. இந்திய பேராழி சுனாமி
II. பூஜ் நிலநடுக்கம்
III. காத்மாண்டு நிலநடுக்கம்
IV. உத்தரகாண்ட் நிலநடுக்கம்
a. II, I, IV, III b. I, II, IV, III
c. IV, I, II, III d. II, IV, I, III
e. விடை தெரியவில்லை

49. பின்வருவனவற்றுள் எவை “இந்தியாவின் உயிரியமிகைப் பல்வகைமை” இடமாகும்?
a. ஆரவல்லி மலை
b. மேற்கு தொடர்ச்சிமலை
c. இன்டோ–கங்கைச் சமவெளி
d. கிழக்கு தொடர்ச்சிமலை
e. விடை தெரியவில்லை

50. பொருத்துக

| | |
|---|---|
| A. சூரியக் குடும்பத்தின் மிகச் சிறியக் கோள் | 1. புதன் |
| B. சூரியக் குடும்பத்தின் மிகப் பெரிய கோள் | 2. வெள்ளி |
| C. சூரியக் குடும்பத்தில் சூரியனிலிருந்து இரண்டாவது கோள் | 3. வியாழன் |
| D. சூரியனுக்கு மிக அருகிலுள்ள கோள் | 4. புளூட்டோ |
| | 5. சனி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 5 | 1 |
| b. | 3 | 5 | 1 | 2 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

51. இந்திய தீபகற்பத்தில் கிழக்கு நோக்கி பாயும் நதிகளில் வடக்கிலிருந்து தெற்காக சரியான வரிசை
a. சுவர்ணரேகா, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணார், காவேரி, வைகை
b. சுவர்ணரேகா, மகாநதி, கிருஷ்ணா , கோதாவரி, காவேரி, வைகை, பெண்ணார்
c. மகாநதி, சுவர்ணரேகா, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, பெண்ணார், வைகை
d. மகாநதி, சுவர்ணரேகா, கிருஷ்ணா, கோதாவரி, காவேரி, வைகை, பெண்ணார்
e. விடை தெரியவில்லை

52. பின்வருவனவற்றுள் எந்த ஜோடி சரியாக பொருத்தப்படவில்லை?

| ரெயில்வே மண்டலம் | தலைமையிடம் |
|---|---|
| a. வடகிழக்கு ரெயில்வே | கோரக்பூர் |
| b. தென்கிழக்கு ரெயில்வே | புவனேஸ்வர் |
| c. கிழக்கு ரெயில்வே | கொல்கத்தா |
| d. தென்கிழக்கு மத்திய ரெயில்வே | பிலாஸ்பூர் |

e. விடை தெரியவில்லை

53. பின்வருவனவற்றுள் எது கலப்பு வேளாண்மையின் முதன்மை பண்பு?
a. பணப்பயிர் மற்றும் உணவுப்பயிர் இரண்டும் பயிரிடுதல்
b. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்களை ஒரே நிலத்தில் பயிரிடுதல்
c. பயிர் வளர்ப்புடன் ஒன்றாக விலங்குகள் வளர்ப்பது
d. மேற்கண்ட எதுவுமில்லை
e. விடை தெரியவில்லை

54. அமில மழைக்கு காரணமான சுற்றுச்சூழல் மாசுபடுத்தி
a. கார்பன் டை ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன்
b. கார்பன் மோனாக்சைடு மற்றும் கார்பன் டை ஆக்சைடு
c. ஓசோன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு
d. நைட்ரஸ் ஆக்ஸைடு மற்றும் சல்பர் டை ஆக்சைடு
e. விடை தெரியவில்லை

55. பின்வரும் மாநிலங்களில் சிங்கவால் குரங்கின் இயற்கை வாழ்விடமாக உள்ள மாநிலங்கள் எவை?
1. தமிழ்நாடு 2. கேரளா
3. கர்நாடகா 4. ஆந்திரப்பிரதேசம்
a. 1, 2 மற்றும் 3 b. 2 மட்டும்
c. 1, 3 மற்றும் 4 d. 1, 2, 3 மற்றும் 4
e. விடை தெரியவில்லை

56. எல்–நினோ எவ்வாறு அழைக்கப்படுகிறது?
a. குழந்தை ஏசு b. சிறிய பெண்
c. சிறிய குழந்தை d. எதுவுமில்லை
e. விடை தெரியவில்லை

57. கோடை காலத்தில் தமிழ்நாடு வறண்ட நிலையில் காணப்படுகிறது, ஏனெனில் தமிழ்நாடு
a. தென்மேற்கு பருவ காற்றின் வங்காள விரிகுடா கிளை காற்றுக்கு இணையாக அமைந்துள்ளது
b. தென்மேற்கு பருவ காற்றின் அரபிக்கடல் கிளைக்கு மழை மறைவுப் பகுதியில் உள்ளது
c. a மற்றும் b இரண்டும்
d. எதுவுமில்லை
e. விடை தெரியவில்லை

58. கீழே உள்ள மாநிலங்களில் எது மைக்கா உற்பத்தியின் தலைமையிடம் என அழைக்கப்படுகிறது?
a. ராஜஸ்தான் b. ஜார்கண்ட்
c. ஒடிசா d. பீகார்
e. விடை தெரியவில்லை

59. கீழே கொடுக்கப்பட்டுள்ள சக்திகளில் எந்த சக்தி புதுப்பிக்க இயலாத சக்தி வளங்களைச் சாராதது ?
a. நிலக்கரி b. பெட்ரோலியம்
c. இயற்கை வாயு d. உயிரி வாயு
e. விடை தெரியவில்லை

60. இந்தியாவில் முதல் நீர் மின் சக்தித் திட்டம் எங்கு தொடங்கப்பட்டது
a. டார்ஜிலிங் நீர்மின் சக்தித்திட்டம்
b. மேட்டூர் நீர் மின்சக்தித்திட்டம்
c. சிவசமுத்திரம் நீர் மின்சக்தித்திட்டம்
d. எதுவுமில்லை
e. விடை தெரியவில்லை

### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 31 a | 32 c | 33 c | 34 d | 35 d |
| 36 c | 37 b | 38 a | 39 b | 40 c |
| 41 b | 42 c | 43 b | 44 b | 45 b |
| 46 b | 47 b | 48 a | 49 b | 50 d |
| 51 a | 52 b | 53 c | 54 d | 55 a |
| 56 a | 57 c | 58 b | 59 d | 60 a |

நாளை புவியியல் பாட கேள்வி–பதில்கள் தொடரும்.